இலங்கையில் புயல், மழையால் உயிரிழப்பு 153-ஆக உயர்வு

மேலும் 29 டன் நிவாரண பொருள்களை அனுப்பியது இந்தியா



புயல் மழையால் பாதிக்கப்பட்ட இலங்கைக்கு மீட்பு சாதனங்கள் மற்றும் நிவாரணப் பொருள்களுடன் தில்லியருகே உள்ள ஹிண்டன் விமான தளத்திலிருந்து சனிக்கிழமை புறப்பட்ட தேசிய பேரிடர் மீட்புப் படையினர்.

கொழும்பு /புது தில்லி, நவ. 29: இலங்கையில் 'டித்வா' புயலின் கோரத்தாண்டவத்தால் உயிரிழந்தோரின் எண்ணிக்கை 153-ஆக அதிகரித்தது. மழை வெள்ள பாதிப்புகளில் சிக்கி மாயமானோரின் எண்ணிக்கை191-ஆக உயர்ந்தது. இதையடுத்து, நாடு முழுவதும் அவசரநிலையை இலங்கை அரசு சனிக்கிழமை அறிவித்தது. இதையடுத்து, உணவு, மருந்து, நாப்கின் உள்பட 29 டன் நிவாரணப் பொருள்களை இந்திய விமானப் படையின் இரு போர் விமானங்கள் மூலம் இந்தியா சனிக்கிழமை அனுப்பியது.

கடந்த 8 ஆண்டுகளில் இல்லாத அளவுக்கு கடும் சேதத்தை டித்வா புயல் ஏற்படுத்திய நிலையில், அவசரநிலை பிரகடனப்படுத்தப்படுவதாக இலங்கை அதிபர் அனுர குமார திசநாயக அறிவித்தார். மேலும், சர்வதேச நாடுகளின் உதவியையும் அவர் கோரியுள்ளார்.

இலங்கையைவிட்டு டித்வா புயல் இந்தியா நோக்கி சனிக்கிழமை நகரத் தொடங்கினாலும் அங்கு அடுத்த சில தினங்களுக்கு கனமழை பெய்ய வாய்ப்புள்ளதாக அந்நாட்டு வானிலை மையம் கணித்துள்ளது.

7 லட்சம் பேர் பாதிப்பு: இலங்கையில் டித்வா புயலால் ஏற்பட்ட மழை வெள்ள பாதிப்புகள் மற்றும் நிலச்சரிவில் சிக்கி சனிக்கிழமை வரை 153 பேர் உயிரிழந்தனர். 191 பேர் மாயமாகினர். சுமார் 2 லட்சம் குடும்பங்களைச் சேர்ந்த 7.74 லட்சம் பேர் இது வரை பாதிக்கப்பட்டுள்ளதாக இலங்கை பேரிடர் மேலாண்மை மையம் (டிஎம்சி) தெரிவித்தது.

இலங்கைக்கு கடும் பாதிப்புகளை ஏற்படுத்திய புயல்களில் ஒன்றாக டித்வா புயல் கருதப்படுகிறது. நாட்டின் பெரும்பாலான நீர்த்தேக்கங்கள் மற்றும் நதிகளின் நீர்மட்டம் தொடர்ந்து உயர்ந்து வருவதால் அதையொட்டிய பகுதிகளில் வாழும் மக்கள் உடனடியாக வெளியேறுமாறு அதிகாரிகள் எச்சரித்தனர். மழை காரணமாக பல்வேறு பகுதிகளில் மின் சாரம் துண்டிக்கப்பட்டு இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளது.

அவசர உதவி மையம்: கனமழையால் பல்வேறு பகுதிகளில் விமான சேவைகள் ரத்து செய்யப்பட்டுள்ளதால் கொழும்பு விமான நிலையத்தில் சிக்கியுள்ள இந்தியர்களுக்கு உதவும் நோக்கில், கொழும்பில் உள்ள பண்டாரநாயக விமான நிலையத்தில் இந்திய தூதரகம் சார்பில் அவசர உதவி மையம் அமைக்கப்பட்டது. அங்கு இந்தியர்களுக்கு குடிநீர், உணவு உள்பட அனைத்து உதவிகளும் வழங்கப்படுவதாக தூதரகம் தெரிவித்தது.

இந்தியர்களுடன் தூதர் சந்திப்பு: விமான நிலையத்தில் சிக்கி கைக்கு சனிக்கிழமை மேற்கொள்ளப்பட்ட நிவாரண உதவிகள் குறித்து இந்திய விமானப் படை வெளியிட்ட எக்ஸ் வலைதளப் பதிவில், 'டித்வா புயலால் கடும் பேரழிவுகளைச் சந்தித்துள்ள இலங்கைக்கு உதவ சி-130 மற்றும் ஐஎல்-76 ஆகிய சரக்கு விமானங்கள் ஹிண்டன் விமானத் தளத்தில் இருந்து வெள்ளிக்கிழமை நள்ளிரவு அனுப்பப்பட்டன.

இதில் 21 டன் நிவாரணப் பொருள்கள் மற்றும் 8 டன் அத்தியாவசிய பொருள்களுடன் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவ 80 என்டிஆர்எஃப் அதிகாரிகளும் அனுப்பிவைக்கப்பட்டனர்.

அண்டை நாடுகளுக்கு முன்னுரிமை அளிக்கும் கொள்கையின் படி இந்தக் கடினமான நேரத்தில் இலங்கைக்கு இந்தியா உறுதுணையாக இருக்கும் என உறுதியளிக்கப்படுகிறது எனத் தெரிவிக்கப்பட்டது. முன்னதாக, 'ஐஎன்எஸ் விக்ராந்த்' மற்றும் 'ஐஎன்எஸ் உதயகிரி' போர்க் கப்பல்கள் மூலம் உணவுப் பொருள்கள் உள்பட 6.5 டன் நிவாரண பொருள்களை இந்தியா வெள்ளிக்கிழமை விநியோகித்தது.

அமெரிக்கா, மாலத்தீவு நிதியுதவி: இந்தியாவைத் தொடர்ந்து இலங்கைக்கு உடனடியாக 20 லட்சம் டாலர்கள் (ரூ.17.8 கோடி) நிதியுதவி வழங்குவதாக அமெரிக்கா தெரிவித்தது. மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வேண்டிய உதவிகளை அமெரிக்கா மேற்கொள்ளும் என இலங்கைக்கான அமெரிக்க தூதர் ஜூலி சுங் உறுதியளித்தார்.

அதேபோல் இலங்கைக்கு 50 ஆயிரம் டாலர்கள் (ரூ.44 லட்சம்) நிதியுதவி மற்றும் 25,000 கடல் உணவு (டூனா) கேன்கள் வழங்குவதாக மாலத்தீவு அறிவித்தது.

போதைப்பொருள் கும்பல்களுக்கு எதிராக கடும் நடவடிக்கை: காவல் துறை தலைவர்களுக்கு பிரதமர் மோடி அறிவுறுத்தல்



ராய்பூர், நவ.29: போதைப்பொருளைக் கடத்தி விற்பனை செய்யும் கும்பல்கள் மீது கடுமையான நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்று காவல் துறை தலைவர்களுக்குப் பிரதமர் மோடி அறிவுறுத்தியுள்ளார்.

நாட்டில் உள்ள டிஜிபிக்கள், ஐஜிக்கள் அடங்கிய காவல் துறை தலைவர்கள் மாநாடு, சத்தீஸ்கரின் ராய்பூர் நகரில் நடைபெறுகிறது. இந்த மாநாட்டை மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா வெள்ளிக்கிழமை தொடங்கி வைத்தார்.

இந்த மாநாட்டுக்கு சனிக்கிழமை தலைமை ஏற்று பிரதமர் மோடி பேசுகையில், 'போதைப்பொருள்கள், திட்டமிட்ட குற்றங்களுக்கு எதிராக அனைத்துக் கோணங்களில்இருந்தும் காவல் துறை தலைவர்கள் போரிட வேண்டும். உளவுத் துறையின் தகவல்கள் துல்லியமாக இருக்க வேண்டும். பல்வேறு புலனாய்வு அமைப்புகள் இடையே ஒத்துழைப்பு இருக்க வேண்டும்.

மாநிலங்களிலும்,தேசியமற்றும் சர்வதேச அளவிலும் போதைப் பொருளைக் கடத்தி விற்பனை செய்யும் கும்பல்கள் மீது கடுமையான நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். அந்தக் கும்பல்களுக்குப் பின்னால் இருந்து திட்டமிடும் முக்கிய நபர்களை கைது செய்து சிறையில் அடைக்க வேண்டும்' என்று வலியுறுத்தினார்.

இதுதொடர்பாக அவர் 'எக்ஸ்' தளத்தில் வெளியிட்ட பதிவில், 'இந்தியப் பாதுகாப்பு முறையின் பல்வேறு அம்சங்கள் குறித்து டிஜிபிக்கள், ஐஜிக்கள் மாநாட்டில் சனிக்கிழமை விரிவான ஆலோசனைகள் மேற்கொள்ளப்பட்டன. இந்தத் துறையில் சிறந்த நடைமுறைகள் மற்றும் புதுமைகளைப் பகிர்ந்துகொள்ள இந்த மாநாடு சிறந்த தளமாகும்' என்றார். இந்த மாநாடு பிரதமர் மோடியின் உரையுடன் ஞாயிற்றுக்கிழமை (நவ.30) நிறைவடைகிறது.

இந்தியாவுக்குள் பயங்கரவாதிகள் ஊடுருவ உதவும் 72 தளங்களை இடம் மாற்றிய பாகிஸ்தான்

ஜம்மு, நவ.29: இந்தியாவுக்குள் பயங்கரவாதிகள் ஊடுருவ உதவும் 72 தளங்களை தொலைதூரப் பகுதிகளுக்கு பாகிஸ்தான் மாற்றியுள்ளதாக எல்லை பாதுகாப்புப் படை (பிஎஸ்எஃப்) தெரிவித்துள்ளது.

நிகழாண்டு பிஎஸ்எஃப் படை நிகழ்த்திய சாதனைகளை எடுத்துரைக்க, ஜம்முவில் பிஎஸ்எஃப் டிஐஜி விக்ரம் குன்வர், ஐஜி சசாங்க் ஆனந்த், டிஐஜி குல்வந்த் ராய் சர்மா ஆகியோர் கூட்டாகச் செய்தியாளர்களை சனிக்கிழமை சந்தித்தனர். அப்போது அவர்கள் கூறியதாவது: பாகிஸ்தானில் இருந்து பயங்கரவாதிகள் இந்தியாவுக்குள் ஊடுருவ இருநாட்டு எல்லைப் பகுதிக்கு அருகே உதவிய பல தளங்களை ஆபரேஷன் சிந்தூரின்போது பிஎஸ்எஃப் அழித்தது.

அதன் பின்னர், அந்தத் தளங்களை தொலைதூரப் பகுதிகளுக்கு மாற்றியது. அவற்றில் 12 தளங்கள் அந்நாட்டின் சியால்கோட் மற்றும் ஸஃபர்வா பகுதிகளுக்கு உள்ளே நீண்ட தொலைவில் இருக்கும் இடங்களில் செயல்படுகின்றன. இந்தியா-பாகிஸ்தான் எல்லையில் இருந்து பிற தொலைதூர இடங்களில் 60 தளங்கள் செயல்படுகின்றன. இந்தத் தளங்கள், அவற்றில் உள்ள பயங்கரவாதிகளின் எண்ணிக்கை மாறிக்கொண்டே இருக்கும்.

அந்தத் தளங்களில் பயங்கரவாதிகள் நிரந்தரமாக இருப்பதில்லை. இந்தியாவுக்குள் பயங்கரவாதிகளை அனுப்ப முடிவு செய்யும்போதுதான் அந்தத் தளங்கள் செயல்பாட்டில் இருக்கும்.

முன்பு பாகிஸ்தானில் ஜெய்ஷ்-ஏ-முகமது, லஷ்கர்-ஏ-தொய்பா இயக்கங்களைச் சேர்ந்த பயங்கரவாதிகள் தனித்தனி இடங்களில் இயங்கினர். ஆபரேஷன் சிந்தூருக்கு பின்னர், அவர்கள் கலவையான குழுவை உருவாக்கியுள்ளனர். பயிற்சி பெற விரும்பும் பயங்கரவாதிகள் அந்தக் குழுவில் சேர வழிவகை செய்துள்ளனர்.

ஆபரேஷன் சிந்தூர் நடவடிக்கையை மீண்டும் தொடங்க மத்திய அரசு தீர்மானித்து உத்தரவு பிறப்பித்தால், அதைப் பின்பற்ற பிஎஸ்எஃப் தயாராக உள்ளது. அந்த நடவடிக்கையின்போது பிஎஸ்எஃப் ஏற்படுத்திய சேதங்களில் இருந்து மீண்டுவர பாகிஸ்தான் எல்லை பாதுகாப்புப் படையினருக்கு அதிக காலமானது. சில இடங்களில் தங்களின் பாதுகாப்பை வலுப்படுத்த அவர்கள் முயற்சித்துள்ளனர். அவர்களின் அனைத்து நடவடிக்கைகளையும் பிஎஸ்எஃப் கண்காணித்து வருகிறது என்று தெரிவித்தனர்.

பிஎஸ்எஃப் தகவல்

பஞ்சாப் நேஷனல் வங்கி
punjab national bank

கடன் மீட்பு நிர்வாகக் கிளை (ARMB) : எண்.448A, டாக்டர் நஞ்சப்பா ரோடு,
கோயம்புத்தூர் - 641 018. போன் : 0422 2231314, 0422-2231345. மின்னஞ்சல் : cs4371@pnb.co.in

அசையாச் சொத்துக்களின் விற்பனைக்கான விற்பனை அறிவிப்பு

அசையாச் சொத்துக்களின் விற்பனைக்கான மின் ஏலத்திற்கான பொது அறிவிப்பு : 17.12.2025 தேதி அன்று (காலை 11.00 மணி முதல் மாலை 4.00 மணி வரை)

முன்வைப்புத் தொகை மற்றும் ஆவணங்கள் சமர்ப்பிக்க கடைசித் தேதி மற்றும் நேரம் : 17.12.2025 தேதி அன்று, மாலை 3.00 மணி வரை

கடனீட்டு சொத்துக்கள் ரொக்கமாக்குதல் மற்றும் நிதி சொத்துக்களை மறு சீரமைத்தல் கடனீட்டு சொத்துக்கள் மீதான உரிமை அமலாக்க சட்டம், 2002, பிணையநலன் (அமலாக்கம்) விதிகள் 2002 ன் விதி 9(1) உடன் கீழ், அசையாச் சொத்துக்களின் விற்பனைக்கான மின்-ஏல விற்பனை அறிவிப்பு.

பஞ்சாப் நேஷனல் வங்கியின் (பாதுகாக்கப்பட்ட கடனீந்தவர்) அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி அவர்கள், மேற்படி வங்கிக்கு வரவேண்டிய கீழே குறிப்பிடப்பட்டுள்ள தொகையை, கீழே குறிப்பிட்டுள்ள கடன்தாரர்(கள்) மற்றும் உத்தரவாதமளித்தவர்(கள்) ஆகியோரிடமிருந்து வசூலிக்கும் பொருட்டு, கடன் வழங்கிய வங்கிக்குப் பிணையப்படுத்தப்பட்ட/ஈடுவைக்கப்பட்ட ஆக்கபூர்வ / கொள்நிலை / அடையான சுவாதீனம் செய்து கொண்ட கீழ்க்கண்ட அசையாச் சொத்தினை கீழே அட்டவணையில் குறிப்பிட்டுள்ள தேதியில் விற்பனை செய்யவுள்ளார் என்பதை குறிப்பாக கடன்தாரர்(கள்) மற்றும் உத்தரவாதமளித்தவர்(கள்) மற்றும் பொதுமக்களுக்கு இந்த அறிவிப்பின் மூலம் தெரியப்படுத்தப்படுகிறது. இந்த சொத்துக்கள் 'எங்கு உள்ளதோ உள்ளபடி', 'என்ன உள்ளதோ உள்ளபடி', 'எப்படியுள்ளதோ உள்ள நிலையில்' விற்கப்படும். சொத்திற்கான குறைந்தபட்ச நிர்ணயிக்கப்பட்ட விலை மற்றும் முன் வைப்புத் தொகை கீழே பட்டியலில் உள்ள விபரப்படியாகும்.

பாதுகாக்கப்பட்ட கடன் வழங்கிய வங்கிக்குத் தெரியவந்த ஏதேனும் வில்லங்கங்கள் குறித்த விபரம் : தெரியவில்லை.

பாதுகாக்கப்பட்ட சொத்துக்களின் அட்டவணை

லாட் எண்.	கிளையின் பெயர் மற்றும் கணக்கின் பெயர் மற்றும் கடன்தாரர்/ உத்தரவாதமளித்தவர் பெயர் மற்றும் விலாசம்	பிணையப்பட்ட அசையாச் சொத்து விபரம் / உரிமையாளரின் பெயர் (சொத்தின் அடமானதாரர்/கள்)	அ) 2002 சர்பாஸி சட்டத்தின் பிரிவு 13(2)ன் படியான கேட்பு அறிவிப்பு தேதி ஆ) நிலுவைத் தொகை இ) 2002 சர்பாஸி சட்டத்தின் பிரிவு 13(4)ன் படியான சுவாதீனம் எடுத்த தேதி ஈ) சுவாதீனத்தின் தன்மை அடையாளம் / கொள்நிலை/ஆக்கபூர்வ சுவாதீனம்	1) ரிசர்வ் விலை 2)முன்வைப்புத் தொகை (EMD) 3) ஏல மடங்குத் தொகை
1	**கிளை : கிராஸ்கட் ரோடு (ID 437900) (குற்போது கோயம்புத்தூர் ARMB க்கு மாற்றப்பட்டுள்ளது)** **M/s. விண்மீன் இன்ஜினியர்ஸ் பிரைவேட் லிட்.,** **கடன்தாரர் :** **M/s.விண்மீன் இன்ஜினியர்ஸ் பிரைவேட் லிட்.,** முதல் தளம், விண்மீன் டவர், KNG புதூர் ரோடு, துடியலூர், கோயம்புத்தூர் – 641 034. **இயக்குநர் மற்றும் உத்தரவாதமளித்தவர் :** **திரு.சபாரெத்தினம் சிங்காரம்,** C-05-01, கிரிம்சன் டான், ராமகிருஷ்ணா பல் மருத்துவமனை எதிரில், நவ இந்தியா ரோடு, கோயம்புத்தூர் – 641 004. **இயக்குநர் :** **திருமதி.S.உமா,** C-05-01, கிரிம்சன் டான், ராமகிருஷ்ணா பல் மருத்துவமனை எதிரில், நவ இந்தியா ரோடு, கோயம்புத்தூர் – 641 004. **உத்தரவாதமளித்தவர் :** **திருமதி.சபாரெத்தினம்** எண்.2, அப்பர் தெரு, கலாக்ஷேத்ரா காலனி, பெசன்ட் நகர், சென்னை – 600 090. **உத்தரவாதமளித்தவர் :** **திருமதி.பிரேமா நாயர்,** க/பெ.திரு.A.மகேஷ்குமார், A-9-02, கிரிம்சன் டான், ராமகிருஷ்ணா பல் மருத்துவமனை எதிரில், நவ இந்தியா ரோடு, கோயம்புத்தூர் – 641 004.	**(அட்டவணைச் சொத்து) :** **குவியல்-1: M/s.விண்மீன் இன்ஜினியர்ஸ்பிலிட்., பெயரிலுள்ள சொத்து (முன்னாள் M/s.எக்செல் புராஜெக்ட் டெவலப்மெண்ட் இந்தியா பி லிட்..) (PAN-AAACX1005B) :** கோயம்புத்தூர் பதிவு மாவட்டம், பெரியநாய்க்கன் பாளையம் சார் பதிவு மாவட்டம், கோயம்புத்தூர் வடக்கு தாலூகா, துடியலூர் கிராம க.ச.எண்.465/3ல் உள்ள 0.78.5 எக்டர் (அல்லது) 1.94 ஏக்கர், தரம் ரூ.2.64 இதனுட்பட்ட 0.14.62 ஏக்கர், க.ச.எண்.465/2ல் உள்ள 0.73.5 எக்டர் (அல்லது) 1.82 ஏக்கர், தரம் ரூ.2.49 இதனுட்பட்ட 0.04.38 ஏக்கர் ஆகமொத்தம் 0.19 ஏக்கர் (768.90 சதுர மீட்டர்). இதில் க.ச.எண்.465/2B நிலத்துக்கு வடக்கு, கிழமேல் ஊராட்சி சாலைக்குத் தெற்கு, க.ச.எண்.465/2A ல் உள்ள 50 அடி டவர் லைன் ரோட்டுக்குக் கிழக்கு, க.ச.எண்.465/3Aயில் உள்ள மீத நிலங்களுக்கு மேற்கு. இதனுட்பட்ட சொத்தின் **அளவுகளாக :** கிழமேல் தென்புறம் 37 அடி, தென்வடல் கிழபுறம் 111 அடி, தென்வடல் மேல்புறம் 114 அடி ஆக உள்ள முக்கோண வடிவ நிலம் 2088 சதுர அடி (அல்லது) 4 சென்ட் 346 சதுர அடி (அல்லது) 193.979 சதுர மீட்டர் நிலம்மற்றும்கட்டப்பட்டுள்ள கட்டிடத்துடன் போக்குவரத்து மற்றும் பிற உபயோகத்திற்கு லே அவுட் ரோடுகளின் உபயோக உரிமை சேர்ந்த சொத்து. மேற்படி சொத்து தற்போதைய உட்பிரிவு எண்.465/2Aயில் கோயம்புத்தூர் மாநகராட்சி எல்லைக்குள் உள்ளது. **அட்சரேகை மற்றும் தீர்க்கரேகை ஒருங்கிணைப்புகள் :** **11.068194 N, 76.929700 E**	அ) 13.09.2022 **ஆ) கேஷ் கிரெடிட்- கணக்கு எண். 0392008700013302- ரூ.2,19,26,952.55, 31.10.2025 தேதி வரை** (மற்றும் 01.11.2025 தேதியிலிருந்து பின்வட்டி மற்றும் பிற செலவுகள்) **ஓவர் டிராப்ட்- கணக்கு எண். 4379009300021619 ரூ.1,34,26,463.84 31.10.2025 தேதி வரை** (மற்றும் 01.11.2025 தேதியிலிருந்து பின்வட்டி மற்றும் பிற செலவுகள்) **டெர்ம் லோன்- கணக்கு எண். 437900EG00000056 ரூ.1,48,94,071.78 31.10.2025 தேதி வரை** (மற்றும் 01.11.2025 தேதியிலிருந்து பின்வட்டி மற்றும் பிற செலவுகள்) **டெர்ம் லோன்- கணக்கு எண். 437900IB00001719 - ரூ.2,69,10,523.80 31.10.2025 தேதி வரை** (மற்றும் 01.11.2025 தேதியிலிருந்து பின்வட்டி மற்றும் பிற செலவுகள்) **டெர்ம் லோன்- கணக்கு எண். 437900IB00005208- ரூ.8,75,36,556.59 31.10.2025 தேதி வரை** (மற்றும் 01.11.2025 தேதியிலிருந்து பின்வட்டி மற்றும் பிற செலவுகள்) **டெர்ம் லோன்- கணக்கு எண். 437900IL00000301-ரூ.2,70,94,487.00 31.10.2025 தேதி வரை** (மற்றும் 01.11.2025 தேதியிலிருந்து பின்வட்டி மற்றும் பிற செலவுகள்) **மொத்த தொகை :** **ரூ. 19,17,89,055.56 (ரூபாய் பத்தொன்பது கோடியே பதினேழு லட்சத்து எண்பத்து ஒன்பதாயிரத்து ஐம்பத்து ஐந்து மற்றும் பைசா ஐம்பத்து ஆறு மட்டும்)** இ) 20.12.2022 ஈ) கொள்நிலை	**குவியல்-1 :** **1) ரூ.46,20,000/-** (ரூபாய் நாற்பத்து ஆறு லட்சத்து இருபதாயிரம் மட்டும்) **2) ரூ.4,62,000/-** (ரூபாய் நான்கு லட்சத்து அறுபத்து இரண்டாயிரம் மட்டும்) **3) ரூ.50,000/-** (ரூபாய் ஐம்பதாயிரம் மட்டும்) **மின் ஏலத் தேதி மற்றும் நேரம் :** **17.12.2025 (புதன்கிழமை) காலை 11.00 மணி முதல் மாலை 4.00 மணி வரை**
2	**குவியல்-2 : M/s.விண்மீன் இன்ஜினியர்ஸ் பி லிட்., பெயரிலுள்ள சொத்து (முன்னாள் M/s.எக்செல் புராஜெக்ட் டெவலப்மெண்ட் இந்தியா பி லிட்..) (PAN-AAACX1005B) : A-அட்டவணை :** கோயம்புத்தூர் பதிவு மாவட்டம், பெரியநாய்க்கன் பாளையம் சார் பதிவு மாவட்டம், கோயம்புத்தூர் வடக்கு தாலூகா, துடியலூர் கிராம க.ச.எண்.465/3ல் உள்ள 1.94 ஏக்கர், தரம் ரூ.2.64. இதனுட்பட்ட 0.146 ஏக்கர் (14.62 சென்ட்), க.ச.எண்.465/2ல் உள்ள 1.82 ஏக்கர், தரம் ரூ.2.49, இதனுட்பட்ட 0.0438 ஏக்கர் (4.38 சென்ட்) ஆகமொத்தம் 0.19 ஏக்கர் (அல்லது) 768.90 சதுர மீட்டர் நிலம் இதில் க.ச.எண்.465/3B நிலத்துக்கு வடக்கு, கிழமேல் ஊராட்சி சாலைக்குத் தெற்கு, க.ச.எண்.465/2A நிலத்துக்குக் கிழக்கு, க.ச.எண்.465/3A நிலத்துக்கு மேற்கு. இதனுட்பட்ட சொத்தின் **அளவுகளாக :** கிழமேல் வடபுறம் மற்றும் தென்புறம் 56 அடி, தென்வடல் கிழபுறம் 110 அடி, தென்வடல் மேல்புறம் 111 அடி ஆகமொத்தம் 6188 சதுர அடி (அல்லது) 14 சென்ட் 90 சதுர அடி (அல்லது) 574.879 சதுர மீட்டர் உடன் மாமூல் தடவழி உரிமைகள் உள்ளிட்ட பிற உரிமைகள் மற்றும் சொத்திற்கான பிற அனைத்து இணைப்புகள் சேர்ந்தது. மேற்படி சொத்து தற்போதைய உட்பிரிவின்படி க.ச.எண்.465/3Aயில் கோயம்புத்தூர் மாநகராட்சி எல்லைக்குள் உள்ளது. **அட்சரேகை மற்றும் தீர்க்கரேகை ஒருங்கிணைப்புகள் :** **11.068306 N, 76.929833 E**	**குவியல்-2 :** **1) ரூ.90,20,000/-** (ரூபாய் தொண்ணூறு லட்சத்து இருபதாயிரம் மட்டும்) **2) ரூ.9,02,000/-** (ரூபாய் ஒன்பது லட்சத்து இரண்டாயிரம் மட்டும்)
3	**குவியல்-3 : M/s.விண்மீன் இன்ஜினியர்ஸ் பி லிட்., பெயரிலுள்ள சொத்து (முன்னாள் M/s.எக்செல் புராஜெக்ட் டெவலப்மெண்ட் இந்தியா பி லிட்..) (PAN-AAACX1005B) : A-அட்டவணை :** கோயம்புத்தூர் பதிவு மாவட்டம், பெரியநாய்க்கன்பாளையம் சார் பதிவு மாவட்டம், கோயம்புத்தூர் வடக்கு தாலூகா, துடியலூர் கிராம க.ச.எண்.465/3ல் உள்ள 1.94 ஏக்கர், தரம் ரூ.2.64 இதனுட்பட்ட 0.14.62 ஏக்கர் (14.62 சென்ட்), க.ச.எண்.465/2ல் உள்ள 1.82 ஏக்கர், தரம் ரூ.2.49 இதனுட்பட்ட 0.04.38 ஏக்கர் (4.38 சென்ட்) ஆகமொத்தம் 0.19 ஏக்கர் அல்லது (19 சென்ட்) அல்லது (768.90 சதுர மீட்டர்). இதில் க.ச.எண்.465/3B நிலத்துக்கு வடக்கு, கிழமேல் ஊராட்சி சாலைக்குத் தெற்கு, க.ச.எண்.465/2Aயில் உள்ள நிலத்துக்குக் கிழக்கு, க.ச.எண்.465/3Aயில் உள்ள நிலத்துக்கு மேற்கு. இதனுட்பட்ட சொத்தின் **அளவுகளாக :** கிழமேல் வடபுறம் மற்றும் தென்புறம் 56 அடி, தென்வடல் கிழபுறம் 110 அடி, தென்வடல் மேல்புறம் 111 அடி ஆகமொத்தம் 6188 சதுர அடி (அல்லது) 14 சென்ட் 90 சதுர அடி (அல்லது) 574.879 சதுர மீட்டர் உடன் மாமூல் தடவழி உரிமைகள் உள்ளிட்ட பிற உரிமைகள் மற்றும் சொத்திற்கான பிற அனைத்து இணைப்புகள் சேர்ந்தது. மேற்படி சொத்து தற்போதைய உட்பிரிவின்படி க.ச.எண்.465/3Aயில் கோயம்புத்தூர் மாநகராட்சி எல்லைக்குள் உள்ளது. **B-அட்டவணை :** 1. மேலே 'A' அட்டவணையில் குறிப்பிட்டுள்ள நிலத்தில் பிரிபடாத பங்கான நிலம் 508.93 சதுர அடி; 2. மேலே 'A' அட்டவணையில் குறிப்பிட்டுள்ள நிலத்தில் பிரிபடாத பங்கான நிலம் 495.22 சதுர அடி; 3. மேலே 'A' அட்டவணையில் குறிப்பிட்டுள்ள நிலத்தில் பிரிபடாத பங்கான நிலம் 535.85 சதுர அடி; 4. மேலே 'A' அட்டவணையில் குறிப்பிட்டுள்ள நிலத்தில் பிரிபடாத பங்கான நிலம் 508.93 சதுர அடி; 5. மேலே 'A' அட்டவணையில் குறிப்பிட்டுள்ள நிலத்தில் பிரிபடாத பங்கான நிலம் 495.22 சதுர அடி; 6. மேலே 'A' அட்டவணையில் குறிப்பிட்டுள்ள நிலத்தில் பிரிபடாத பங்கான நிலம் 535.85 சதுர அடி; 7. மேலே 'A' அட்டவணையில் குறிப்பிட்டுள்ள நிலத்தில் பிரிபடாத பங்கான நிலம் 535.85 சதுர அடி; **C-அட்டவணை :** மேலே குறிப்பிட்டுள்ள 'A' அட்டவணைச் சொத்தில் கட்டப்படவுள்ள "எசன்ஷியா டவர்" என்றழைக்கப்படவுள்ள கட்டிடத்தின் முதல் தளத்தில் உள்ள குடியிருப்பு அடுக்குக் கட்டிடம் எண்.3ல் கண்ட 1095 சதுர அடி கட்டிடச் சொத்து. **அட்சரேகை மற்றும் தீர்க்கரேகை ஒருங்கிணைப்புகள் :** **11.068306 N, 76.929833 E**	**குவியல்-3 :** **1) ரூ.48,10,000/-** (ரூபாய் நாற்பத்து எட்டு லட்சத்து பத்தாயிரம் மட்டும்) **2) ரூ.4,81,000/-** (ரூபாய் நான்கு லட்சத்து எண்பத்து ஒராயிரம் மட்டும்) **3) ரூ.50,000/-** (ரூபாய் ஐம்பதாயிரம் மட்டும்) **மின் ஏலத் தேதி மற்றும் நேரம் :** **17.12.2025 (புதன்கிழமை) காலை 11.00 மணி முதல் மாலை 4.00 மணி வரை**
4	**குவியல்-4 : M/s.விண்மீன் இன்ஜினியர்ஸ் பி லிட்., பெயரிலுள்ள சொத்து (முன்னாள் M/s.எக்செல் புராஜெக்ட் டெவலப்மெண்ட் இந்தியா பி லிட்..) (PAN-AAACX1005B) : A-அட்டவணை :** கோயம்புத்தூர் பதிவு மாவட்டம், பெரியநாய்க்கன்பாளையம் சார் பதிவு மாவட்டம், கோயம்புத்தூர் வடக்கு தாலூகா, துடியலூர் கிராம க.ச.எண்.465/3ல் உள்ள 1.94 ஏக்கர், தரம் ரூ.2.64. இதனுட்பட்ட 0.146 ஏக்கர் (14.62 சென்ட்), க.ச.எண்.465/2ல் உள்ள 1.82 ஏக்கர், தரம் ரூ.2.49, இதனுட்பட்ட 0.0438 ஏக்கர் (4.38 சென்ட்) ஆகமொத்தம் 0.19 ஏக்கர் (அல்லது) 19 சென்ட் (அல்லது) 768.90 சதுர மீட்டர் நிலம் இதில் க.ச.எண்.465/3B நிலத்துக்கு வடக்கு, கிழமேல் ஊராட்சி சாலைக்குத் தெற்கு, க.ச.எண்.465/2A நிலத்துக்குக் கிழக்கு, க.ச.எண்.465/3A நிலத்துக்கு மேற்கு. இதனுட்பட்ட சொத்தின் **அளவுகளாக :** கிழமேல் வடபுறம் மற்றும் தென்புறம் 56 அடி, தென்வடல் கிழபுறம் 110 அடி, தென்வடல் மேல்புறம் 111 அடி ஆகமொத்தம் 6188 சதுர அடி (அல்லது) 14 சென்ட் 90 சதுர அடி (அல்லது) 574.879 சதுர மீட்டர் உடன் மாமூல் தடவழி உரிமைகள் உள்ளிட்ட பிற உரிமைகள் மற்றும் சொத்திற்கான பிற அனைத்து இணைப்புகள் சேர்ந்தது. மேற்படி சொத்து தற்போதைய உட்பிரிவின்படி க.ச.எண்.465/3Aயில் கோயம்புத்தூர் மாநகராட்சி எல்லைக்குள் உள்ளது. **B-அட்டவணை :** 1. மேலே 'A' அட்டவணையில் குறிப்பிட்டுள்ள நிலத்தில் பிரிபடாத பங்கான நிலம் 508.93 சதுர அடி; 2. மேலே 'A' அட்டவணையில் குறிப்பிட்டுள்ள நிலத்தில் பிரிபடாத பங்கான நிலம் 495.22 சதுர அடி; 3. மேலே 'A' அட்டவணையில் குறிப்பிட்டுள்ள நிலத்தில் பிரிபடாத பங்கான நிலம் 535.85 சதுர அடி; 4. மேலே 'A' அட்டவணையில் குறிப்பிட்டுள்ள நிலத்தில் பிரிபடாத பங்கான நிலம் 508.93 சதுர அடி; 5. மேலே 'A' அட்டவணையில் குறிப்பிட்டுள்ள நிலத்தில் பிரிபடாத பங்கான நிலம் 495.22 சதுர அடி; 6. மேலே 'A' அட்டவணையில் குறிப்பிட்டுள்ள நிலத்தில் பிரிபடாத பங்கான நிலம் 535.85 சதுர அடி; 7. மேலே 'A' அட்டவணையில் குறிப்பிட்டுள்ள நிலத்தில் பிரிபடாத பங்கான நிலம் 535.85 சதுர அடி; **C-அட்டவணை :** மேலே குறிப்பிட்டுள்ள 'A' அட்டவணைச் சொத்தில் கட்டப்படவுள்ள "எசன்ஷியா டவர்" என்றழைக்கப்படவுள்ள கட்டிடத்தின் இரண்டாம் தளத்தில் உள்ள குடியிருப்பு அடுக்குக் கட்டிடம் எண்.4ல் கண்ட 1040 சதுர அடி கட்டிடச் சொத்து; மேலே குறிப்பிட்டுள்ள 'A' அட்டவணைச் சொத்தில் கட்டப்படவுள்ள "எசன்ஷியா டவர்" என்றழைக்கப்படவுள்ள கட்டிடத்தின் இரண்டாம் தளத்தில் உள்ள குடியிருப்பு அடுக்குக் கட்டிடம் எண்.5ல் கண்ட 1012 சதுர அடி கட்டிடச் சொத்து; மேலே குறிப்பிட்டுள்ள 'A' அட்டவணைச் சொத்தில் கட்டப்படவுள்ள "எசன்ஷியா டவர்" என்றழைக்கப்படவுள்ள கட்டிடத்தின் இரண்டாம் தளத்தில் உள்ள குடியிருப்பு அடுக்குக் கட்டிடம் எண்.6ல் கண்ட 1095 சதுர அடி கட்டிடச் சொத்து. **அட்சரேகை மற்றும் தீர்க்கரேகை ஒருங்கிணைப்புகள் :** **11.068306 N, 76.929833 E**	**குவியல்-4 :** **1) ரூ.1,37,90,000/-** (ரூபாய் ஒரு கோடியே முப்பத்து